தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

# இன்றைய வேளாண் செய்திகள்

21.09.2012 A.M

21th Sep 20012

## அட்மா திட்டத்தில் விவசாயிகள் சுற்றுலா

நாமக்கல்: நாமக்கல் வட்டாரத்தில், வேளாண் துறை மூலம், அட்மா திட்டத்தின் கீழ், சேலம் ஆவின் நிறுவனத்துக்கு, 35 விவசாயிகள் சுற்றுலா அழைத்துச் செல்லப்பட்டனர்.சேலம் ஆவின் உதவி பொது மேலாளர் ரமேஷ் தலைமை வகித்து, பால் உற்பத்தி, கொள்முதல் மற்றும் மதிப்பூட்டப்பட்ட பொருட்கள் தயாரிக்கும் முறை குறித்து, பயிற்சி அளித்தார். மேலும், வேளாண்துறை மூலம் டாக்டர் தங்கமணி, பசுந்தாள் உரம் தயாரிப்பது மற்றும் தீவனப் பயர்கள் வளர்க்கும் முறை குறித்தும் விளக்கிக் கூறினார்.கால்நடைத்துறை டாக்டர் வெள்ளைச்சாமி, தொழில்நுட்ப மேலாளர் சுபத்ரா, வட்டார தொழில்நுட்ப வல்லுநர்கள் தினேஷ்வரன், சங்கர் கணேஷ் உட்பட பலர் பங்கேற்றனர்.

21th Sep 20012

## "விதை'யில் நகைகள் "வீட்' பயிற்சி

திருச்சி: தமிழ்நாடு மகளிர் தொழில்முனைவோர் சங்கம் (வீட்) சார்பில், திருச்சி "டிடிட்சியா' அலுவலகத்தில் விதை மற்றும் தானியங்களின் மூலம் அலங்கார நகைகள் தயாரிப்பு குறித்த ஒரு நாள் பயிற்சி முகாம் நடந்தது. பாரதிதாசன் பல்கலை மகளிரியல் துறை பேராசிரியர் மணிமேகலை தலைமை வகித்தார்."ஜிங்கில் ஜூவல்ஸ்' நிறுவன நிர்வாக இயக்குனர் பாலமுரளி, விதை மற்றும் தானியங்களில் அலங்கார நகைகள் செய்வது குறித்தும், சந்தையில் விற்பனை செய்வது குறித்தும் விளக்கினார். தென்னிந்திய "டிடிட்சியா' தொழில் ஆலோசகர் ஞானசேகர், திருச்சி கிளை ஆலோசகர் இன்பவல்லி, பொருளாளர் பிலோமி உள்பட பலர் பங்கேற்றனர்.

| 21th Sep 20012 | கொய்யா விளைச்சல் கடும் பாதிப்பு |
|---|---|

பனமரத்துப்பட்டி: பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், பருவ மழை பொய்த்ததால், கொய்யா உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.விளைச்சல் குறைந்ததால், விலை கிடுகிடுவென அதிகரித்துள்ளது.சேலம், பனமரத்துப்பட்டி வட்டாரத்தில், மல்லூர்,பி.மேட்டூர், வேங்காம்பட்டி, பள்ளித்தெருப்பட்டி, களரம்பட்டி, பெரமனூர், அடிக்கரை,காளியாகோவில் புதூர்,நல்லியாம்புதூர் உள்ளிட்ட கிராமங்களில், 1,000 ஏக்கர் பரப்பளவில் கொய்யா நடவு செய்யப்பட்டுள்ளது. இப்பகுதியில் விளையும் கொய்யாப்பழங்களை, மல்லூரில் இயங்கும் தினசரி மார்கெட்டில் விவசாயிகள் விற்பனை செய்கின்றனர்.திருச்சி, நாமக்கல்,திருச்செங்கோடு, ஈரோடு, சேலம் மற்றும் கேரளா உள்ளிட்ட இடங்களில் இருந்து வரும் வியாபாரிகள், அவற்றை வாங்கி செல்கின்றனர். குறைந்த பராமரிப்பு செலவில், ஆண்டுக்கு இருமுறை கொய்யா சீஸன் இருப்பதால், விவசாயிகளுக்கு கணிசமான வருவாய் கிடைத்து வருகிறது.நடப்பாண்டில், பருவமழை பெய்வதில் தாமதம் ஏற்பட்டு வருவதால், கொய்யா உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. கொய்யா விளைச்சலை எதிர்பார்த்திருந்த விவசாயிகளும், வியாபாரிகளும் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.இது குறித்து, கொய்யா நடவு செய்துள்ள விவசாயிகள் கூறியதாவது:ஆண்டுதோறும் புரட்டாசி மாதம், கொய்யா அறுவடை சீஸன் துவங்கி விடும். இந்த ஆண்டு பருவ மழை இல்லாததால், மரத்தில் பிஞ்சு உற்பத்தி குறைந்துள்ளது. அறுவடை சீஸன் துவங்க வேண்டிய புரட்டாசி மாதத்தில், பிஞ்சுகள் மட்டுமே உள்ளது.விவசாயிகள், குறைந்த அளவு விளைந்த கொய்யாவை அறுவடை செய்து, மல்லூர் மார்கெட் கொண்டு வருகின்றனர். சீஸன் நேரத்தில், மல்லூர் மார்கெட்டுக்கு, 10 டன் வரை கொய்யா விற்பனைக்கு கொண்டு வரப்படும். தற்போது, நாள்தோறும், 500 கிலோ கொய்யா விற்பனைக்கு வருவதால், உள்ளூர், வெளியூர் வியாபாரிகளுக்குள் போட்டி ஏற்பட்டுள்ளது. இதனால், ஒரு கிலோ, 15 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது. புரட்டாசி சனிக்கிழமை, ஆயுதபூஜை நாட்களில், கொய்யா விலை மேலும் அதிகரிக்கும்.வெளியூர் வியாபாரிகள், விவசாயிகளின் தோட்டத்திற்கு சென்று, குறைந்தளவு விளைந்த கொய்யாவை கொள்முதல் செய்ய, முன்தொகை கொடுத்து வருகின்றனர். பருவ மழை ஏமாற்றியதால், கொய்யா சீஸன் எதிர்பார்த்திருந்த விவசாயிகள் விரக்தி அடைந்துள்ளனர்.

| 21th Sep 20012 | சிறப்பு பேரவை கூட்டத்தை புறக்கணித்த கரும்பு விவசாயிகள்:அரசுஅதிகாரிகள் சமரசம் |
|---|---|

திருவாலங்காடு:"கரும்பு அனுப்பிய வகையில் நிலுவைத் தொகை, 15 கோடி ரூபாயை வழங்கினால்தான், சிறப்பு பேரவைக் கூட்டத்தில் கலந்து கொள்வோம்' என, விவசாயிகள் நேற்று சிறப்பு பேரவை கூட்டத்தை புறக்கணித்து, ஆலை முன் முற்றுகை போராட்டம்

நடத்தினர்.அதிகாரிகளின் சமரச பேச்சைத் தொடர்ந்து கூட்டத்தில், விவசாயிகள் கலந்து கொண்டனர்.திருவாலங்காட்டில் உள்ளது திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலை. இந்த ஆலைக்கு, திருத்தணி, திருவாலங்காடு, அரக்கோணம், பேரம்பாக்கம், தக்கோலம், நெமிலி, திருவள்ளூர், ஊத்துக்கோட்டை மற்றும் சுற்றுப்புற பகுதிகளில் இருந்து விவசாயிகள் கரும்புகளை அனுப்பி வருகின்றனர்.

26,120 விவசாயிகள்இவ்வாறு ஆலையில், 26,120 விவசாயிகள் அங்கத்தினர்களாக பதிவு செய்து உள்ளனர். சர்க்கரை ஆலையில் ஆண்டுதோறும், சிறப்பு பேரவைக் கூட்டம் நடைபெறுவது வழக்கம். இவ்வாண்டுக்கான பேரவைக் கூட்டம் நேற்று நடந்தது. கூட்டத்தையொட்டி, ஆலையில் பதிவு பெற்ற அங்கத்தினர்களுக்கு சிறப்பு பேரவை அறிக்கை அனுப்பப்பட்டது.இதையடுத்து, நேற்று ஆலையின் முன் அனைத்து கரும்பு விவசாயிகள் சங்கச் செயலர் நாதமுனி தலைமையில், 1,000க்கும் மேற்பட்ட கரும்பு விவசாயிகள் குவிந்தனர். ஆலையின் நுழைவு வாயிலின் முன், "விவசாயிகளுக்கு வழங்க வேண்டிய கரும்பு நிலுவைத் தொகையை உடனே வழங்கிய பின், சிறப்பு பேரவையை கூட்டு' என, முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

போலீசார் குவிப்பு:தகவலறிந்து, அங்கு திருவாலங்காடு போலீசார் குவிந்தனர். சர்க்கரை ஆலை நிர்வாகி (பொறுப்பு) சிற்றரசு நேரில் வந்து, விவசாயிகளிடம் பேச்சுவார்த்தை நடத்தினார். 10 நாட்களுக்குள் கரும்பு நிலுவைத் தொகை கண்டிப்பாக வழங்கப்படும் என, அவர் உறுதி அளித்தார். இதையடுத்து, விவசாயிகள் பேரவைக் கூட்டத்திற்கு சென்றனர்.கூட்டத்தில், 2008-09, முதல் 2010-11 வரை ஆண்டுகளுக்கான தணிக்கை அறிக்கை, ஆண்டறிக்கை வாசிக்கப்பட்டது. 2012-13 ஆண்டிற்கான உத்தேச வரவு-செலவு திட்டம் அங்கீகரிக்கப்பட்டது. தொடர்ந்து, விவசாயிகளுக்கு கரும்பு நிலுவைத் தொகை உடனே வழங்க வேண்டும் என, விவசாயிகள் தரப்பில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

**21th Sep 20012**

## சாமந்தி பூ சாகுபடி பரப்பு ஓசூரில் 50 சதவீதம் சரிவு

ஓசூர்: ஓசூர் தாலுகாவில், பருவ மழை பொய்த்ததால், சாமந்தி பூ சாகுபடி பரப்பு, 50 சதவீதம் குறைந்தது. தரமில்லாத பூ உற்பத்தியால், எதிர்பார்த்த விலை கிடைக்காமல், விவசாயிகள் பெரும் நஷ்டம் அடைந்துள்ளனர்.

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள நல்ல மண் வளம், குளிர்ந்த கால நிலையை பயன்படுத்தி, விவசாயிகள் சாமந்திப்பூ சாகுபடி செய்கின்றனர். மாவட்டத்தில் உள்ள ஓசூர், தளி, தேன்கனிக்கோட்டை, ராயக்கோட்டை, உத்தனப்பள்ளி மற்றும் பாகலூர் பகுதியில் விவசாயிகள், 3,000 ஏக்கரில் சாமந்தி பூ சாகுபடி செய்தனர்.இங்கு உற்பத்தியாகும் சாமந்தி பூக்கள் பெங்களூரு, ஹைதராபாத், புனே, சூரத், மும்பை மற்றும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு அனுப்பப்படுகிறது. சாமந்தி பூ வியாபாரத்தை பொறுத்த வரை, விநாயகர் சதுர்த்தி, தீபாவளி,

ஆயுதபூஜை, பொங்கல் மற்றும் வர லட்சுமி பண்டிகைகளை குறி வைத்து சாகுபடி செய்யப்படுகிறது.விநாயகர் சதுர்த்தியையொட்டி, ஆண்டுதோறும் ஓசூர் பகுதியில் விவசாயிகள் அதிகளவு சாமந்தி சாகுபடி செய்து வருகின்றனர். நடப்பாண்டு, எதிர்பார்த்த பருவ மழை பெய்யவில்லை.நீர் ஆதாரமில்லாமல், சாமந்தி சாகுபடி பரபரப்பு இந்தாண்டு, 50 சதவீதம் வீழ்ச்சி அடைந்தது. வெறும், 800 ஏக்கரில் மட்டுமே சாமந்தி சாகுபடி செய்யப்பட்டது. கூடுதல் சாகுபடி செலவு, நீர் ஆதாரமில்லாமல், தரமில்லாத பூக்கள் உற்பத்தி ஆகியவற்றால், போதிய விலை கிடைக்காமல், விவசாயிகளுக்கு பெரும் நஷ்டம் ஏற்பட்டுள்ளது.

21th Sep 20012

## வரத்து அதிகரித்ததால் சரிந்தது தக்காளி விலை

ஈரோடு: வெளி மாவட்டங்களில் இருந்து, தக்காளி வரத்து அதிகரித்ததால், ஈரோடு மார்க்கெட்டில் தக்காளி விலை சரிந்துள்ளது. எட்டு மாதங்களுக்கு பின், தக்காளி கிலோ ஐந்து ரூபாய்க்கு விற்பனையானது.சத்தியமங்கலம், காஞ்சிக்கோவில், தாராபுரம், உடுமலை, பொள்ளாச்சி, திருச்செங்கோடு மற்றும் ராயக்கோட்டை பகுதியில் இருந்து நாட்டுத்தக்காளி, பெங்களூருவில் இருந்து கிராஸ் தக்காளியும், ஈரோடு மார்க்கெட்டுக்கு விற்பனைக்கு வருகிறது.நாள்தோறும், எட்டு டன் தக்காளி வரும். ஆறு மாதத்துக்கு மேலாக, தக்காளி கிலோ, 15 ரூபாய் முதல், அதிகபட்சம், 45 ரூபாய் வரையே விற்பனை செய்யப்பட்டது. நான்கு நாட்களாக, மார்க்கெட்டில் தக்காளியின் விலை சரிவடைந்து உள்ளது. நேற்று காலை, உழவர் சந்தைகளில், இரண்டரை கிலோ தக்காளி, 10 ரூபாய்க்கும், மார்க்கெட் கடைகளில் கிலோ, ஐந்து ரூபாய்க்கும் விற்கப்பட்டது. மொத்த விலையில், 20 கிலோ பெட்டி, 80 ரூபாய் முதல், 90 ரூபாய் வரை விற்கப்பட்டது.நேதாஜி காய்கறி மார்க்கெட் காய்கறி மொத்த வியாபாரி செல்வராஜ் கூறியதாவது:கேரளாவுக்கு தக்காளி அனுப்புவது குறையும் போது, ஈரோடு, சேலம் மார்க்கெட்டுக்கு கூடுதல் லோடு தக்காளி வரத்து காணப்படும். கடந்த மாதம் தக்காளி உற்பத்தியாகும் பகுதிகளில் மழை பெய்துள்ளது. தவிர, பகல் நேரத்தில் வெயில் அடிப்பதால், விளைச்சல் அதிகரித்துள்ளது. திருச்செங்கோடு, பொள்ளாச்சி, மேச்சேரி, ராயக்கோட்டை ஆகிய இடங்களில் இருந்து கூடுதல் லோடு வந்ததால், விலை சரிவை சந்தித்துள்ளது. ஒரு மாத காலம் நீடிக்கும். பணிக்காலம் துவங்கியதும், மீண்டும் விலை உயர வாய்ப்புள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.

21th Sep 20012

## கால்நடைகளுக்கு மூலிகை சிகிச்சை

கோபிசெட்டிபாளையம்: ஜெயம் பிராணி நல அறக்கட்டளை சார்பில் பாப்பாங்காட்டூரில் கால்நடைகளுக்கு, இலவச மூலிகை சிகிச்சை முகாம் நடந்தது.சோற்றுக் கற்றாழை, அருகம்புல்,

ஆவாரம் பூ, இலைப் பிரண்டை, நீலநொச்சி, ஆடாதொடை, துளசி, கரிசாலை, செம்பருத்தி, பொன்னாங்கன்னி உள்ளிட்ட, 32 வகையான மூலிகை மற்றும் சுக்கு, மிளகு, திப்பிலி, ஓமம், பூண்டு, இஞ்சி உள்ளிட்ட சமையல் பொருட்கள் கலக்கி இடித்து உருண்டையாக்கி, மஞ்சள் தூள் சேர்த்த, மசால் உருண்டை கால்நடைகளுக்கு கொடுக்கப்பட்டது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கால்நடைகளுக்கு இந்த மருந்தை கொடுக்கும் போது, நோய் எதிர்ப்பு சக்தி உருவாகிறது. தொற்று நோய் தாக்காது.வேலிபருத்தி, சுண்டைக்காய், பாகல் இலை, எருக்கன் இலை, பீநாறி சங்கு இலை, பிரண்டை, நீல நொச்சி இலை, சிறியாநங்கை ஆகியவற்றை சம அளவு எடுத்து, இடித்து, சாறு பிழிந்து, கால்நடைகளுக்கு கொடுக்கப்பட்டது. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை கொடுக்கும் போது கால்நடைகளின் வயிற்றில் உள்ள குடற்புழுக்கள் நீங்கி, கறவை மாடுகளின் பாலின் அளவு கூடும் என, தெரிவிக்கப்பட்டது.முகாமில், 124 கால்நடைகளுக்கு மூலிகை மசால் உருண்டையும், 231 ஆடுகளுக்கு குடற்புழு நீக்கம் செய்யப்பட்டது. சினை பிடிக்காத கால்நடைகள் பரிசோதனை செய்து, மூலிகை மருந்து வழங்கப்பட்டது.நிறுவன தலைவர் கோவிந்தராஜ் தலைமை வகித்தார். கரும்பு வளர்ப்போர் சங்க தலைவர் சென்னியப்பன், "ஆவின்' முன்னாள் நிர்வாக இயக்குனர் லோகநாதன், உலக மகளிர் உரிமை கழக உறுப்பினர் ஜெயலட்சுமி, சித்த டாக்டர்கள் உமாமகேஸ்வரி, பாபு உள்பட பலர் கலந்து கொண்டனர்.

**21th Sep 20012**

## பருவமழை பொய்த்ததால் விவசாயிகள் கவலை:மின்தடையும் பயிர்களை வாட்டுவதால் விவசாய பணிகள் முடக்கம்

ஒட்டன்சத்திரம்:பருவமழை பெய்யாததால் ஒட்டன்சத்திரம் பகுதியில் விவசாய பணிகளில் முழுவீச்சில் இறங்க விவசாயிகள் தயக்கம் காட்டிவருகின்றனர்.மாவட்டத்தில் ஒட்டன்சத்திரம் பகுதியில் காய்கறி உள்ளிட்ட பல்வேறு பயிர்கள் பயிரடப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு தென்மேற்கு பருவமழை பொய்த்ததால் விவசாயிகள் ஏமாற்றமடைந்தனர். இதனால் வேளாண் பணிகள் முற்றிலும் முடங்கி உள்ளது. மானாவாரி நிலங்களில் ஒரு உழவு கூட செய்ய முடியாத நிலை உள்ளது.

மழை இல்லாததால் கிணறுகளில் நீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. இதனால் விவசாயிகள் உழவு ஓட்டுதல், விதைத்தல் உள்ளிட்ட பணிகளை தொடங்கவில்லை. ஆடிப்பட்டம் தேடி விதைத்த காலம் போய் மழையை தேடும் நிலைக்கு விவசாயிகள் ஆளாகியுள்ளனர். காவேரியம்மாபட்டி, தேவத்தூர் உள்ளிட்ட பல கிராமங்களில் விளைச்சல் முடிந்த முருங்கை செடிகளை அழித்துவிட்டு, மாற்று விவசாயம் துவங்க தயக்கம் காட்டி வருகின்றனர். முன்னேற்பாடாக பல இடங்களில் பல்லாரி நாற்றங்கால் விடப்பட்ட போதிலும், மழை பெய்யாததால் விவசாயிகள் வேளாண்பணிகளில் அக்கறை காட்டவில்லை. விவசாயி சுப்பிரமணி கூறியதாவது:கிணற்றில் உள்ள நீரைக்கொண்டு உழவுப் பணிகளை தொடங்கலாம் என்றால்,

மின்தடை காரணமாக ஒரே சீராக நீர் பாய்ச்ச முடியவில்லை. இதனால் உழவுப் பணிகளை தொடங்க தயக்கமாக உள்ளது, என்றார். வடகிழக்கு பருவமழை துவங்கினால் தான் ஒட்டன்சத்திரம் பகுதியில் வேளாண்பணிகளில் விவசாயிகள் ஆர்வம் காட்டும் நிலை உள்ளது.

| 21th Sep 20012 | காய்கறி சாகுபடியை அதிகரிக்க5 கிராமங்களுக்கு ரூ. 6 கோடி |
|---|---|

கம்பம்:காய்கறி சாகுபடியில் உயர் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி, உற்பத்தியை அதிகரிக்க ஐந்து கிராமங்களுக்கு, 6 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. தேசிய விவசாய வளர்ச்சி திட்டத்தில், தோட்டக்கலை பயிர்கள் சாகுபடியை அதிகரிக்க பல திட்டங்கள், மானியங்கள் வழங்கப்படுகின்றன. தற்போது காய்கறி உற்பத்தியில் உயர் தொழில்நுட்பத்தை புகுத்தி, காய்கறி சாகுபடியில் புரட்சியை ஏற்படுத்த மாநில அரசு திட்டம் ஒன்றை தயாரித்துள்ளது. இத்திட்டத்திற்கென தமிழகம் முழுவதும் 75 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. தேனி மாவட்டத்தில் காமயகவுண்டன்பட்டி, ராயப்பன்பட்டி, முத்தலாபுரம் உள்ளிட்ட 5 கிராமங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. இக்கிராமங்களுக்கு 6 கோடி ரூபாய் அனுமதிக்கப்பட்டுள்ளது. இத்தொகை 3 ஆண்டுகளுக்கு பிரித்து வழங்கப்படும். ஒவ்வொரு கிராமத்திற்கும் ஒரு உதவி தோட்டக்கலை அலுவலர் தனியாக நியமனம் செய்யப்பட்டுள்ளார். அந்த கிராமத்தில் ஒரு அலுவலகம் திறக்கப்படும். கம்ப்யூட்டர், இன்டர் நெட் வசதிகள் செய்யப்படும்.காய்கறி, பழங்கள் சாகுபடியில், வீரிய ஒட்டுரக கன்றுகள் மற்றும் விதைகள் இலவசமாக வழங்கப்படும்.

| 21th Sep 20012 | உயர்ந்தது வெங்காயம் விலை |
|---|---|

ஸ்ரீவில்லிபுத்தூர்:ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில், கிலோ 20 ரூபாய்க்கு விற்ற வெங்காயம், 35 ரூபாயாக உயர்ந்துள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூரில் பிள்ளையார்நத்தம், பூவாணி, மல்லி உட்பட பல இடங்களில் 500க்கு அதிகமான ஏக்கர்களில் வெங்காயம் நடவு செய்வர். கடந்தாண்டு அதிகளவு பரப்பில் நடவு செய்ததால், விளைச்சலும் ஓரளவு கிடைத்தது. மார்ச்சில் கிலோ வெங்காயம், 2ரூபாய் 50 காசுக்கு வியாபாரிகள் கொள்முதல் செய்ததால், விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். தற்போது ஸ்ரீவில்லிபுத்தூர் பகுதியில் உற்பத்தி குறைந்த நிலையில்,கடந்த சில மாதமாக விலை உயர்ந்துள்ளது. கடந்த மாதம் ஒரு கிலோ 20 ரூபாய்க்கு விற்ற வெங்காயம், தற்போது 35 ரூபாய்க்கு விற்பனையாகிறது. வியாபாரி முருகன் ,"" ஸ்ரீவி.,பகுதியில் வெங்காயம் இல்லாததால், தென்காசி, சுரண்டை பகுதிகளில் இருந்து வருகிறது. இதனால் விலை ஏறி உள்ளது. வரும் காலங்களில் மேலும் உயர வாய்ப்புள்ளது," என்றார்.

இன்றைய வேளாண் செய்திகள்

20.09.2012 P.M

21.09.2012 A.M

| 21th Sep 20012 | இன்று விவசாயிகள் குறைதீர் கூட்டம் |
|---|---|

சிவகங்கை, செப். 21: சிவகங்கையில் இன்று விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது.

மாவட்ட ஆட்சியர் அலுவலக வளர்ச்சி மன்றக் கூட்ட அரங்கில், ஆட்சியர் ராஜாராமன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில், விவசாயிகள் மற்றும் விவசாயிகள் சங்கப் பிரதிநிதிகள் பங்கேற்று, விவசாயம் சார்ந்த குறைகளைத் தெரிவித்து பயன்பெறலாம், என மாவட்ட ஆட்சியர் அலுவலகச் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

20th sep 2012 P.M

| 20th Sep 20012 | நாட்டுக்கோழி வளர்ப்பு: விவசாயிகளுக்கு அழைப்பு |
|---|---|

திருச்சி, செப். 19 : தமிழக அரசு அறிவித்துள்ள மானியத்துடன் கூடிய நாட்டுக் கோழி வளர்ப்பில் ஈடுபட்டு அதிக லாபம் பெற விவசாயிகளுக்கு ஆட்சியர் ஜெயஸ்ரீ முரளிதரன் அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

நாட்டுக்கோழி முட்டைகள் மற்றும் இறைச்சி ஆகியவற்றுக்கு பொதுமக்களிடையே அதிக தேவை உள்ளதால், நாட்டுக் கோழி வளர்ப்புக்கு மானியத்துடன் கூடிய உதவி அரசால் அளிக்கப்பட்டு வருகிறது. அந்த வகையில், திருச்சி மாவட்டத்தில் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மற்றும் கூட்டுறவு வங்கிகள், வர்த்தக வங்கிகள் மூலம் கிராமப்புறங்களிலிருந்து பயனாளிகள் தேர்வு செய்யப்படவுள்ளனர்.

ஒரு பயனாளிக்கு ரூ. 30 முதல் ரூ. 32 வரை விலையுள்ள 250 எண்ணிக்கை கொண்ட ஒரு அலகில் கோழிக் குஞ்சுகள் வழங்கப்படும். இவற்றை வளர்ப்பதற்கு கொட்டகை அமைக்க ஒரு கோழிக்கு ஒரு சதுர அடி இடம் தேவைப்படுகிறது. இதற்கு முன்பருவ கால மானியமாக 25 சதவீதமும், முழுத்தொகையும் திருப்பிச் செலுத்தும் போது பின்கால மானியமாக மத்திய அரசின் நபார்டு திட்டத்தின் கீழ் 25 சதவீதமும் (தாழ்த்தப்பட்டோர் மற்றும் பழங்குடியினருக்கு 33 சதவீதம்) மானியம் வழங்கப்படவுள்ளது.

இந்த கோழிகள் 12 முதல் 14 வாரங்களில் ஒரு கிலோ எடையுள்ள கோழியாக வளர்கிறது. இவை குறைந்தபட்சம் ரூ. 200 வரை விற்பனை செய்து லாபம் பெறலாம். ஒரு ஆண்டுக்கு மூன்று தொகுதிகளாக கோழிகள் வளர்க்க மானியம் வழங்கப்படுகிறது.

முதல் தொகுதியில் கோழி குஞ்சுகளை வளர்க்க 58 சதவீதமும், இரண்டாவது தொகுதிக்கு 50 சதவீதமும், மூன்றாவது தொகுதிக்கு 30 சதவீதமும் மானியம் வழங்கப்படும்.

மேலும், தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு வணிக ரீதியிலான கோழி வளர்ப்புக்கென 5 நாள்கள் பயிற்சியும் அளிக்கப்படும். எனவே, நாட்டுக்கோழி வளர்ப்பவர்களும் இந்தத் திட்டத்தில் விண்ணப்பித்து பயன்பெறலாம். இதுகுறித்து மேலும் விவரங்கள் அறிய திருச்சி, முசிறி, லால்குடி கால்நடை உதவி மருத்துவ அலுவலர்கள் மற்றும் கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநரை தொடர்பு கொள்ளலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

| 20th Sep 20012 | ஈரோடு சந்தையில் பழங்கள், காய்கறிகள் விலை கடும் உயர்வு: டீசல் விலை அதிகரிப்பால் மக்கள் பாதிப்பு |
|---|---|

ஈரோடு, செப். 19: டீசல் விலை உயர்வால் ஈரோடு சந்தையில் பழங்கள் விலை 30 சதவீதமும், காய்கறிகள் விலை 15 சதவீதமும் உயர்ந்துள்ளது.

ஈரோடு நகரில் உள்ள நேதாஜி தினசரி சந்தையில் வெளிமாநிலங்களில் இருந்து வரும் பழங்களும், வெளிமாவட்டங்களில் இருந்து வரும் காய்கறிகளும் விற்பனை செய்யப்படுகின்றன. ஈரோடு, நாமக்கல், சேலம் மாவட்டங்களில் இருந்து வரும் வியாபாரிகள், இவற்றை வாங்கிச் செல்கின்றனர். இங்கு தினமும் ரூ.1.5 முதல் ரூ.2 கோடி வரை வர்த்தகம் நடைபெறுகிறது.

சண்டிகார், தில்லி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து ஆப்பிளும், ஆந்திர மாநிலத்தில் இருந்து சாத்துக்குடியும், மகாராஷ்டிரத்தில் இருந்து மாதுளையும், கர்நாடகத்தில் இருந்து விதை இல்லா திராட்சையும், தேனி, கம்பம் மாவட்டங்களில் இருந்து ஆரஞ்சு, கொய்யா, திராட்சை உள்ளிட்டவையும் ஈரோடு சந்தைக்கு தினமும் கொண்டு வரப்படுகின்றன.

சந்தையில் ஆப்பிள் தினமும் 30 முதல் 40 டன், சாத்துக்குடி 50 டன், மாதுளை 4 முதல் 5 டன், தேனி, கம்பம், கோபியில் இருந்து திராட்சை 15 டன், கொளத்தூர், மாதேஸ்வரன் மலை, சத்தி, சென்னிமலை பகுதிகளில் இருந்து கொய்யா, பப்பாளி 10 டன்கள் விற்பனை செய்யப்படுகின்றன.

டீசல் விலை உயர்வுக்குப் பின், வெளிமாநிலங்களில் இருந்து ஈரோட்டுக்கு வரும் சரக்கு போக்குவரத்து கட்டணம் 10 சதவீதம் அதிகரித்துவிட்டதால், பழங்களின் விலை 30 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

இதுகுறித்து ஈரோடு நேதாஜி தினசரி சந்தை கனி வணிகர்கள் சங்கத் தலைவர் ஆர்.கே.சண்முகவேல் கூறியது:

மகாராஷ்டிரத்தில் இருந்து ஈரோட்டுக்கு ரூ.16,000 ஆக இருந்த சரக்கு போக்குவரத்து கட்டணம், இப்போது ரூ.22,000 ஆக உயர்ந்துள்ளது. சரக்கு போக்குவரத்து கட்டண உயர்வால் ஆப்பிள் பெட்டி (25 கிலோ) ரூ.1,700-ல் இருந்து ரூ.2,200 ஆக உயர்ந்துள்ளது. ஒரு கிலோ ஆப்பிள் விலை ரூ.20-ம், மாதுளை விலை ரூ.30-ம், சாத்துக்குடி, சப்போட்டா விலை தலா ரூ.5-ம் உயர்ந்துள்ளது. பொதுவாக பழங்கள் விலை 30 சதவீதம் வரை உயர்ந்துள்ளது என்றார்.

ஈரோடு சந்தைக்கு உதகையில் இருந்து காரட், பீட்ரூட், பீன்ஸ் ஆகியவையும், ஒசூரில் இருந்து கோஸ், பூக்கள், வெள்ளரி ஆகியவையும் கொண்டுவரப்படுகின்றன. இதைத் தவிர, ஒட்டன்சத்திரத்தில் இருந்து முருங்கை, அவரை, புடலங்காய், பச்சை மிளகாய் ஆகியவையும், பெங்களூரில் இருந்து பேபி கார்ன், உருளை, பெரிய வெங்காயம், இஞ்சி ஆகியவையும் விற்பனைக்காகக் கொண்டுவரப்படுகின்றன.

காய்கறி விலை உயர்வு குறித்து ஈரோடு தினசரி சந்தையில் உள்ள மொத்த வியாபாரி டி.எம்.ஆர். மூர்த்தி கூறியது:

ஈரோட்டை சுற்றியுள்ள காஞ்சிக்கோயில், நசியனூர், தாண்டாம்பாளையம், வெள்ளக்கோவில் உள்ளிட்ட இடங்களில் கத்தரி, கீரைகள், வெண்டைக்காய், கொத்தவரங்காய் உள்ளிட்டவை விற்பனைக்காக ஈரோடு சந்தைக்கு கொண்டுவரப்படுகின்றன. காய்கறிகள் விலை சராசரியாக 15 சதவீதம் வரை உயர்ந்துள்ளது. மேலும் விலை உயர வாய்ப்புள்ளது என்றார்.

காய்கறிகள், பழங்கள், மளிகைப் பொருள்கள் விலை உயர்ந்து இருப்பதால், குடும்ப பட்ஜெட் 25 சதவீதம் வரை உயரும். இதன் மூலம் நடுத்தர மற்றும் ஏழை மக்கள் மிகவும் பாதிக்கப்படுவர்.

மளிகை விலை 2 நாள்களில் உயரும்

இதுகுறித்து ஈரோடு மாவட்ட வணிகர் சங்கங்களின் பேரமைப்பு மாவட்டப் பொருளாளர் ராஜகோபால் கூறியது:

பழங்கள், காய்கறிகள் இருப்பு வைக்கப்படாமல் உடனடியாக விற்பனை செய்யப்படுவதால், விலை உடனடியாக உயர்ந்துவிட்டது. ஆனால், மளிகைப் பொருள்கள் மொத்தமாக வாங்கப்பட்டு, கிடங்குகளில் வைக்கப்பட்டு பின்னர்தான் விற்பனை செய்யப்படுகின்றன.

எனவே, இன்னும் 2 நாள்களுக்குப் பிறகுதான் விலை உயர்வு பற்றிய முழுவிவரம் தெரியும். இருப்பினும், 10 சதவீதம் வரை விலை உயர வாய்ப்புள்ளது. என்றார்.

## உழவர் பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம்: ஆட்சியர் ஆய்வு

பெரம்பலூர், செப். 19: பெரம்பலூர் அருகே உள்ள எசனை கிராமத்தில் உழவர் பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

முகாமை பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது கூறியது:

உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் குடும்பத் தலைவர் மற்றும் உறுப்பினர்களுக்கான கல்வி உதவித்தொகை, திருமண உதவித்தொகை, முதியோர் உதவித்தொகை, ஆதரவற்ற விவசாய கூலித் தொழிலாளர் உதவித்தொகை, உடல் உறுப்பு இழப்பு நிவாரணம், இயற்கை மரண நிவாரணம், விபத்து மரண நிவாரணம், இறுதிச்சடங்கு உதவித்தொகை உள்ளிட்ட நலத் திட்ட உதவிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

தற்போது உழவர் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பதிவு செய்து அடையாள அட்டை பெற்றுள்ள 18 முதல் 65 வயதிற்குள்பட்ட உழவர்களில், கடுமையான நோய்களால் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மாதாந்திர உதவித்தொகையாக ரூ. 1,000 வழங்க தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது. இந்தத் திட்டத்தில் சேர, தகுதியுள்ள விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் பெறுவதற்காக அவர்கள் வசிக்கும் கிராமங்களிலேயே சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த முகாம், எளம்பலூர், குரும்பலூர் (தெற்கு), பூலாம்பாடி (கிழக்கு), காரியானூர், அனுக்கூர், துங்கபுரம் (தெற்கு), பென்னகோணம் (மேற்கு), எழுமூர் (கிழக்கு), அழகிரிபாளையம், காரை (மேற்கு) ஆகிய கிராமங்களில் வியாழக்கிழமை (செப்டம்பர் 20) காலையும், செங்குணம், குரும்பலூர் (வடக்கு), பூலாம்பாடி (மேற்கு), நூத்தப்பூர் (வடக்கு), பிரம்மதேசம், துங்கபுரம் (வடக்கு), வடக்கலூர், எழுமூர் (மேற்கு), ஆதனூர் (தெற்கு), நாரணமங்கலம் ஆகிய கிராமங்களில் வியாழக்கிழமை மதியமும் நடைபெற உள்ளது.

இதேபோல, துறைமங்கலம், மேலப்புலியூர் (கிழக்கு), தழுதாழை, நூத்தப்பூர் (தெற்கு), மேட்டுப்பாளையம் (தெற்கு), காடூர் (வடக்கு), ஒகளூர் (வடக்கு), கீழப்புலியூர் (தெற்கு), ஆதனூர் (வடக்கு), நாட்டார்மங்கலம் ஆகிய கிராமங்களில் வெள்ளிக்கிழமை (செப்டம்பர் 21) காலையும், பெரம்பலூர் (தெற்கு), மேலப்புலியூர் (மேற்கு), மலையாளப்பட்டி, பாண்டகப்பாடி, மேட்டுப்பாளையம் (வடக்கு), புதுவேட்டக்குடி, ஒகளூர் (தெற்கு), கீழப்புலியூர் (வடக்கு), கொட்டரை, செட்டிகுளம் ஆகிய கிராமங்களில் வெள்ளிக்கிழமை மதியமும் முகாம் நடைபெற உள்ளது.

உழவர் பாதுகாப்புத் திட்ட அட்டை பெறாதவர்கள் தங்களது பகுதியில் நடைபெறும் உழவர் பாதுகாப்புத் திட்ட சிறப்பு முகாம்களில் கலந்துகொண்டு பயன்பெற வேண்டும். மேலும், இந்த முகாம்களில் பட்டா மாறுதல், குடும்ப அட்டை பெறுவது உள்ளிட்ட கோரிக்கை மனுக்களும் பெறப்படும் என்றார் ஆட்சியர்.

ஆய்வின்போது, சமூக பாதுகாப்புத் திட்ட தனி வட்டாட்சியர் பழனிதேவி, வருவாய் ஆய்வாளர் முத்துக்குமார் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

**20th Sep 20012** | **மானிய விலையில் இடுபொருள்கள் வழங்க ரூ. 1.12 கோடி**

பெரம்பலூர், செப். 19: பெரம்பலூர் மாவட்டத்தில் 5,644 ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிடுவதற்காக, மானிய விலையில் இடுபொருள்கள் வழங்க ரூ. 1.12 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

பெரம்பலூர் மாவட்டத்தில், மானாவாரி மக்காச்சோளம் மற்றும் பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேளாண் துறை சார்பில் இடுபொருள்கள் மானிய விலையில் வழங்கப்பட்டு வருகின்றன.

நிகழாண்டில் (2012- 13) கூடுதலாக மானாவாரி மக்காச்சோளம் பயிரிடுவதற்காக சிறு, குறு விவசாயிகளுக்கு 25% மானியத்தில், ஓர் ஏக்கருக்கு ரூ. 2 ஆயிரம் வீதம் 5,644 ஏக்கருக்கு 1,12,89,000 ரூபாயில் இடுபொருள்கள் வழங்க

நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும், பருத்தி பயிருக்கு நுண்சத்து பற்றாக்குறையை நீக்கி மகசூலை அதிகரிக்க, இலைவழியாக தெளிக்கும் நுண்ணூட்ட உரம் 50% மானியத்தில் 10,750 ஏக்கர் பரப்பளவுக்கு வழங்க ரூ. 15.05 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மக்காச்சோளம் சாகுபடி செய்யும் சிறு, குறு விவசாயிகள், நீண்ட இழை பருத்தி சாகுபடி செய்யும் விவசாயிகள், சம்பந்தப்பட்ட வேளாண் விரிவாக்க மைய உதவி இயக்குநரை அணுகி மானிய விலையில் இடுபொருள்கள் பெற்று பயன்பெறலாம்.

**20th Sep 20012** | **வாழையில் உர மேலாண்மை: வம்பனில் செப். 25-ல் பயிற்சி**

புதுக்கோட்டை, செப். 19: புதுக்கோட்டை அருகே உள்ள வம்பன் வேளாண் அறிவியல் நிலையத்தில் விவசாயிகளுக்கு வாழையில் உர மேலாண்மைப் பயிற்சி முகாம் செப். 25-ல் நடைபெறுகிறது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

புதுக்கோட்டை மாவட்டத்தில் 2,639 ஹெக்டேரில் வாழை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இது ஆலங்குடி, கந்தர்வக்கோட்டை, திருமயம், அறந்தாங்கி, குளத்தூர் வட்டங்களில் பயிரிடப்பட்டு

வருகிறது. வாழையில் புவன், ரொபஸ்டா, கிராண்ட் நையன் ரகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன.

வாழை சாகுபடியில் உர மேலாண்மை செய்தால் மட்டுமே நல்ல செழிப்பான மரங்களிலிருந்து அதிக எடை கொடுக்கும் வாழைத் தார்களைப் பெற முடியும். வம்பன் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் 25.9.2012-ல் வாழையில் மேலாண்மை குறித்த ஒரு நாள் பயிற்சி நடைபெற உள்ளது.

பயிற்சியில் மண் மாதிரி, உரங்கள் இடும் அளவு மற்றும் நீர்வழி உரமிடல் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்பட உள்ளது.

எனவே, புதுக்கோட்டை மாவட்டத்தைச் சோ்ந்த வாழை சாகுபடி செய்யும் விவசாயிகள் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

இன்றைய வேளாண் செய்திகள்

20.09.2012 P.M

21.09.2012 A.M

21th Sep 20012

## கம்பம் பள்ளத்தாக்கில் திராட்சை விளைச்சல் அமோகம்



கம்பம் : கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளான கம்பம், கூடலுர், சுருளிப்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் கருப்பு பன்னீர் திராட்சை மற்றும் விதையில்லா (சீட்லெஸ்) ரக திராட்சை பயிர் செய்யப்பட்டு வருகிறது. கருப்பு பன்னீர் திராட்சையில் வெடிப்பு, செவட்டை நோய் தாக்குதல் அதிகம் ஏற்படுகிறது. மேலும் குறைந்த விலையாலும் விவசாயிகள் நஷ்டமடைந்து வந்தனர்.

இந்நிலையில் தோட்டக்கலைத் துறையினர் கடந்தா ண்டு இப்பகுதியை சேர்ந்த 20க்கும் மேற்பட்ட விவசாயிகளை மகாராஷ்டிராவின் புனேவுக்கு அழைத்து சென்று ஏற்றுமதி ரக

திராட்சை பயிரிடும் முறை குறித்து விளக்கினர். அங்கிருந்து திரும்பிய விவசாயிகள் சரத் சீட்லெஸ், கிரிஸ்மஸ் ரோஸ், மெடிக்கா உள்ளிட்ட ஏற்றுமதி ரக திராட்சைகளை சோதனைக்காக நடவு செய்தனர்.

இது குறித்து சுருளிப்பட்டி விவசாயி பரதன் கூறுகை யில், "கடந்த 4 மாதங்களுக்கு முன்பு சோதனைக்காக பயிரிடப்பட்ட ஏற்றுமதி ரக சரத் சீட்லெஸ் திராட்சை நன்கு விளைந்துள்ளது. இது கிலோ ரூ.60 வரை விற்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்து ள்ளனர்.

21th Sep 20012

## பாசனத்திற்காக கல்லணை திறப்பு



திருச்சி: டெல்டா மாவட்டங்களின் பாசன விவசாயத்திற்காக, கல்லணையிலிருந்து தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது. தற்போதைய நிலவரப்படி கல்லணையிலிருந்து, வினாடிக்கு 13 ஆயிரம் கன அடி நீர் வெளியேற்றப்படுகிறது. இதன் மூலம் மேட்டூரிலிருந்து கல்லணை வழியே செல்லும் நீரால், 5 டெல்டா மாவட்டங்கள் பயன்பெறும் என்பது குறிப்பிடத்தக்கது. கல்லணையிலிருந்து திறந்துவிடப்பட்ட நீரின் மூலம், தஞ்சை உள்ளிட்ட 5 மாவட்டங்களில் 10 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறும். காவிரி நீரால் தஞ்சை, நாகை, திருவாரூர் உள்ளிட்ட 5 மாவட்ட நிலங்கள் பயன்பெறும்.

20th Sep 2012

## 20th Sep 20012 | 25ம் தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்

திருவள்ளூர், : திருவள்ளூர் கலெக்டர் ஆசிஷ் சட்டர்ஜி வெளியிட்டுள்ள அறிக்கை: விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் 25ம்தேதி காலை 11 மணிக்கு நடக்கிறது. வேளாண்மை, தோட்டக்கலை, வருவாய், மின்வாரியம், கூட்டுறவு, பொதுப்பணி, வேளாண்மை பொறியியல், மீன்வளம், கால்நடை, வேளாண் விற்பனை துறை மற்றும் வேளாண் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் சந்தேகங்களுக்கு பதிலளிக்கின்றனர். விவசாயிகள் தவறாது கலந்து கொண்டு பயன்பெறலாம்.

## 20th Sep 20012 | கம்பு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம்

காட்டுமன்னார்கோவில், : காட்டுமன்னார்கோவில் பகுதியில் பெரும்பாலானோர் விவசாயிகள். கடுமையான வறட்சி காரணமாக மாற்று பயிர்களை பயிரிடுவதில் விவசாயிகள் விரும்பி செய்கின்றனர். ஆழ்குழாய் கிணறு வைத்திருப்பவர்கள் தங்களுடைய நிலங்களில் நெற்பயிரை தவிர்த்து சோளம், முருங்கை, கத்திரி, வெண்டை என பல பயிர்களை பயிர் செய்துள்ளனர். மிக குறுகிய கால பயிரான கம்பு பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வத்துடன் உள்ளனர்.
கடந்த காலங்களில் புஞ்சை நிலத்தில் நிலகடலை போன்று கம்பையும் அதிகம் பயிரிட்டனர். காலை உணவாக கம்பு கூழினை கிராமங்களில் சாப்பிட்டனர். நாகரீக உலகில் காலையில் இட்லி, சப்பாத்தி, பூரி என வகை வகையான உணவு வகைகள் தயாரித்து சாப்பிட்டு வந்தாலும் கிராம மக்கள் கம்பங்கூழ் சாப்பிடுவதையே அதிகம் விரும்புகின்றனர். தற்போது நகர பகுதிகளில் தள்ளுவண்டியில் கம்பு, கேழ்வரகு கூழ் விற்பனை அதிகம் விற்பனை செய்யப்படுகிறது. இதை அனைத்து தரப்பு மக்களும் விரும்பி அருந்தி வருகின்றனர். இதை கருத்தில் கொண்டே சில பகுதிகளில் கம்பு சாகுபடியினை செய்து வருகின்றனர்.

20th Sep 20012

## ஆயக்குடியில் கொய்யா செடியில் மாவுப்பூச்சி அதிகரிப்பு விவசாயிகள் கவலை

பழநி, : பழநி அருகே ஆயக்குடியில் கொய்யா செடியில் வெள்ளை ஈ தாக்குதல் நோய் ஏற்பட்டுள்ளதால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

பழநி அருகே ஆயக்குடி பகுதியில் அதிகளவில் கொய்யா, நெல்லி, சப்போட்டா, மிளகாய், கத்திரி, பருத்தி உள்ளிட்டவை பயிரிடப்படுகின்றன. தமிழகத்தில் திருப்பூர், திருச்சி, கோவை உள்ளிட்ட பகுதிகளுக்கும், கேரளா, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட வெளி மாநிலங்களுக்கும் அதிகளவில் அனுப்பி வைக்கப்படுகின்றன. கொய்யா விற்பனை சந்தையின் தலைநகரம் என ஆயக்குடி அழைக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இங்கு பனாரஸ், 49, லக்னோ வகை கொய்யா அதிகளவில் விளைவிக்கப்படுகிறது. இச்செடிகளில் மாவுப்பூச்சி மற்றும் வெள்ளை ஈக்களின் தாக்குதல் தற்போது அதிகளவில் ஏற்பட்டுள்ளது. இதனால் செடிகளின் கொழுந்துகள் தங்களின் முளைப்புத் தன்மையை இழந்துள்ளன. மேலும் காய்கள் பூச்சி தாக்குதலுக்கு ஆளாகி புள்ளிகள் விழுந்து உண்ணுவதற்கு தகுதியற்றதாகி விடும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. கொய்யா மட்டுமின்றி சப்போட்டா, எலுமிச்சை உள்ளிட்ட மற்ற காய்களும் இதே பாதிப்பிற்கு ஆளாகும் நிலை ஏற்பட்டுள்ளன.

காய்கள் பாதிப்பின் காரணமாக ஆயக்குடி பகுதி விவசாயிகள் கடும் பாதிப்பிற்குள்ளாகி உள்ளனர். வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் அளவிற்கு தரமானது என பெயர் பெற்ற ஆயக்குடி கொய்யாவின் நிலை தற்போது தலைகீழாய் மாறி ஆயக்குடி கொய்யா என்றாலே தவிர்க்கும் நிலை உண்டாகி உள்ளது. இதுகுறித்து பழநி தோட்டக்கலைத்துறையினர் கூறுகையில், ''பழநி பகுதியில் நடப்பாண்டில் போதிய மழை இல்லை. இதனால் இப்பூச்சியின் இனப்பெருக்கம் அதிகரித்துள்ளது. ஆரம்ப கட்டமாக இருந்தால் வேம்பு எண்ணெயை கலந்து அடித்தால் போதுமானது. முற்றிய நிலையில் ஒரு லிட்டர் தண்ணீருக்கு 2 மில்லி புரபனோபாஸ் கலந்து அடிக்கலாம். அல்லது 10 லிட்டர் தண்ணீருடன் 6 மில்லி இமியோகுளோபிரிட் கலந்து அடிக்கலாம் அல்லது ஒரு லிட்டர் தண்ணீரில் 2 கிராம் நீட்டோமைல் கலந்து கைப்பம்பு மூலம் அடிக்கலாம். பார்த்தீனிய செடிகளின் மூலமே இப்பூச்சி பரவுவதால் விவசாயிகள் இச்செடிகளை உடன் அகற்றி விட வேண்டும். மேலும் விபரங்களுக்கு பழநி தோட்டக்கலைத்துறை அலுவலகத்தை அணுகலாம்,''என்றனர்.

## ஒட்டுண்ணி தாவரத்தால் அழியும் மரங்கள்

காரைக்குடி, : காரைக்குடி கல்லூரி சாலையில் கஸ்குட்டா என்ற ஒட்டுண்ணி தாவரத்தால் அழியும் மரங்களை பாதுகாக்க நெடுஞ்சாலை துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூகஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைக்குடி மகர்நோன்பு திடல், கல்லூரி சாலை, கோட்டையூர், ஸ்ரீராம்நகர் புதுவயல், கானாடுகாத்தான், மற்றும் அராவதிபுதூர் முதல் தேவகோட்டை வரை ரோட்டரின் இருபுறங்களிலும் வேம்பு, கென்றை, உதியமரம் என 500க்கும் மேற்பட்ட பலவகையாக மரங்கள் உள்ளன. கல்லூரி சாலையில் மட்டும் 50க்கும் மேற்பட்ட மரங்கள் உள்ளன. இவ்வகை மரங்கள் பல்வேறு பகுதிகளில் இருந்து 50 ஆண்டுகளுக்கு முன்பு வள்ளல்அழகப்ப செட்டியாரால் நடப்பட்டது.

சாலைகளில் உள்ள மரங்கள் நெடுஞ்சாலை துறையினரால் பாரமரிக்கப்படுகிறது. அழகப்பா பல்கலைக்கழகம், அழகப்பா மாதிரிபள்ளி, அரசு கலைக்கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி வளாகங்களில் 100க்கும் மேற்பட்ட மரங்கள் உள்ளன. இங்குள்ள உதியமரங்களில் கஸ்குட்டா ரிபாலிகா என்ற ஒட்டுண்ணி தாவரங்களும், வேப்பமரங்களில் வேம்பு ஒட்டுண்ணிகளும் படர்ந்துள்ளன.  பறவைகள் மூலம் மரக்கிளைகளில் கொடியாக ஒட்டுண்ணிகள் பரவுகின்றன. இத்தாவரங்கள் ஹாஸ்டேரியங்கள் வேர் மூலம் படரும். இதற்கு தேவையான சத்துகளை சைலகுழாய்கள் மூலம் மரங்களில் துளையிட்டு மரங்களில் உள்ள நீர்ச்சத்து, கனிமபொருட்கள்மற்றும் ஊட்டசத்துகளை எடுத்துக்கொள்ளும்.

மரங்களில் உள்ள சத்துபொருட்கள் குறைந்து 5 ஆண்டுகளில் மரங்களில் உள்ள இலைகள் முழுவதும் விழுந்துவிடும். இதனால் ஒளிச்சேர்க்கை நடத்தமுடியாமல் மரங்கள் பட்டு கீழே விழுந்துவிடும். இந்த ஒட்டுண்ணி பாதிப்பால் கல்லூரி சாலை, மகர்நோன்பு திடல்  மற்றும் பல்கலைக்கழக வளாகம் ஆகியபகுதிகளில் மட்டும் 30க்கும் மேற்பட்ட மரங்கள் பதிக்கப்பட்டுள்ளன. எனவே ஒட்டுண்ணிகளால் அழிந்துவரும் மரங்களை காப்பாற்ற நெடுஞ்சாலை துறையினர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூகஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.